# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 27
ஆண்டு சந்தா ரூ. 100/-

மே - MAY
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை 3
பெண்கள் பகுதி 7
வாலிபர் பகுதி 9
சிறுவர் பகுதி 11
ஓராண்டில்... வேதவாசிப்பு



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA** Ph.D.,

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.S. (IT&M)., M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### தமிழன் T.V. யில்
ஞாயிறு காலை 7.00 மணி

### நம்பிக்கை T.V. யில்
ஞாயிறு மதியம் 3.30 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...



மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

**கிருபையுள்ள வார்த்தை**
நமது ஆத்துமத்திற்கு உயிரூட்டும்
உன்னதர் இயேசுவின் வார்த்தை

YouTube
@graciouswordcoc


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா

# என் மீட்பர் உயிரோடிருக்கிறார்
# MY REDEEMER LIVES



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், என்றும் உயிரோடிருக்கின்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயராலே அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

சென்ற மாதம் நமது ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு சொன்ன வார்த்தைகளில் 4 காரியங்களை படித்தோம். இந்த மாதம் அதன் தொடர்ச்சியை படிக்க நம் மனதினை ஆயத்தப்படுத்துவோம்.

## 5. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு..

யோவான் 20:27-29 “பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார். உன் கையை நீட்டி, என் விலாவிலேபோடு. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.”

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, அப்போஸ்தலர்களுக்கு தரிசனமானபோது, அப்போஸ்தலனாகிய தோமா அங்கே இல்லை. அவன் அப்போஸ்தலர்கள் சொன்ன வார்த்தையை நம்பாமல், அவிசுவாசத்துடன் பேசினான். மறுமுறையும் கர்த்தர் தரிசனமான போது, கர்த்தர் தோமாவை பார்த்து சொன்ன வார்த்தை அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்பதாகும்.

விசுவாசத்திற்காக போராடும்படியாக அழைக்கப் பட்டவர்கள், விசுவாசிக்கவே போராடுவது எவ்வளவு வேதனைக்குரியது. அப்போஸ்தலர்கள் அனைவருமே விசுவாசிக்க போராடினார்கள். ஆண்டவர் இயேசு சொன்னபடியே மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததை, அவர்கள் நம்ப மிகவும் போராடினார்கள் ஆண்டவர் சொன்னது நடக்கும் என்ற விசுவாசத்திற்கும், அது எப்படி மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள் என்ற அவிசுவாசத்திற்கும் இடையில் அவர்கள் போராடினர் (லூக்கா 24:36-43). அவர்கள் அனைவரும், ஆண்டவர், யவீருவின் மகளை (மாற்கு 5:22), நாயின் ஊர் விதவையின் மகனை (லூக்கா 7:11-17), செத்து நாறிப்போன லாசருவை உயிரோடே அவர் எழுப்பியதினை (யோவான் 11), கண்ணாரக் கண்டும் விசுவாசிக்க தடுமாறினார்கள்.

நாம் எப்படி? ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியான நாம், ஆபிரகாமைப் போல விசுவாசத்தில் வல்லவர்களாக இருக்கின்றோமா? அல்லது பெலவீனமாக இருக்கின்றோமா? (ரோமர் 4:17-21), நம்மை நாமே “நாம் விசுவாசமுள்ளவர்களா?” என பரிசோதனை செய்து (2கொரிந்தியர் 13:5), தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்போம் (2 கொரிந்தியர் 5:6).

## 6. நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?

யோவான் 21:15 “அவர்கள் போஜனம்பண்ணின பின்பு, இயேசு சீமோன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்.”

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, அப்போஸ்தலர்களுக்கு தரிசனமான ஒருமுறை, பேதுருவைப் பார்த்து கேட்ட கேள்வி இது. இந்த கேள்வியை அவர் மூன்றுமுறை கேட்டார்.

பேதுருவும் ‘ஆம்’ என்று மூன்று முறையும் பதிலளித்தார். அப்பொழுது ஆண்டவர் இயேசு, என்னில் அன்பாக இருந்தால் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். நாம் கிறிஸ்துவை நேசிக்கின்றோமா? உறவுகள் எல்லாரையும் விட, உடமைகள் எல்லாவற்றையும் விட அவரை நேசிக்கின்றோமா?. பேதுருவிடம் மற்ற அப்போஸ்தலர்களை விட என்னில் அன்பாக இருக்கின்றாயா என்று வினவினார். நம்மிடம் அது போல வினவினால், நம் சபையில் இருக்கின்ற எல்லாரையும்விட நாம் ஆண்டவரை அதிகமாக நேசிக்கின்றோமா?

ஆம் என்றால், அவருக்கு அப்படியே கீழ்ப்படிவோம். பேதுருவிடம் ஆடுகளை மேய்க்கும்படியாக ஆண்டவர் கூறியது, சபையை கவனித்துக் கொள்வதாகும். இன்றைய நாட்களிலே அதனை சபையின் மூப்பர்கள் பார்த்துக் கொள்வர் (1பேதுரு 5:1-4). நாம் ஆடுகளாயிருக்கின்றோம். ஆகையால் பிரதான மேய்ப்பராகிய நமது ஆண்டவரின் சத்தத்திற்கு அப்படியே அடிபணிவோம் (யோவான் 10:27). அதுவே நம்மைக் குறித்த தேவ சித்தமாகும் மற்றும் அன்பின் வெளிப்பாடாகும் (யோவான் 14:15).

## 7. நீ என்னைப் பின்பற்றிவா..

யோவான் 21:22 “அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன? நீ என்னை பின்பற்றிவா என்றார்.”

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, காண்பித்த தரிசனங்கள் ஒன்றில் பேதுருவிற்கு அவர்கொடுத்த கட்டளை இது. யோவானைக் குறித்து பேதுரு கேள்வி கேட்கையில், அவனுக்கு ஆண்டவர் சொன்ன பதில் இது. அதன் பொருள் ‘நான் உனக்கு கட்டளையிட்டதையெல்லாம் செய்ய கவனமாயிரு, மற்ற காரியங்களில் உன் கவனத்தினை செலுத்தாதே’ என்பதாக உள்ளது.

இன்றைக்கு ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றும்படி வந்த அநேகர் பின்வாங்கிப் போக காரணம், மற்றவர்களை நோக்கி பார்ப்பதாகும். ஆண்டவர் மாத்திரமே நமக்கு முழுமையான மற்றும் இறுதியான முன்மாதிரியாக உள்ளார். நாம் அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து அவரை பின்பற்ற வேண்டும் (1பேதுரு 2:21). தன் பின்னே வர விரும்புகின்றவர்களை தான், கிறிஸ்து அவரவர்க்குறிய சிலுவையை எடுத்துக்கொண்டு, அனுதினமும் பின்பற்ற சொன்னார் (மத்தேயு 16:24).

ஆண்டவரைவிட்டு நம் கவனத்தினை விலகச் செய்யும் பாவத்தினையும், பாரமான யாவற்றையும் நாம் தூக்கியெறிய வேண்டும்; மற்றும், நமக்குள் விசுவாசத்தினை துவக்கினவரும், முடிக்கிறவருமாகிய அவரை நோக்கியே நமது விசுவாச பயணம் இருக்க வேண்டும் (எபிரெயர் 12:1-4). வலது இடது புறம் சாய வேண்டாம். இந்த உலகமும் அதின் செல்வாக்கும், பாவமும் அதன் வீரியமும் மிகவும் கவர்ச்சிகரமான ஆபத்தானது. ஆகையால் அவைகள் நம்மை மடைமாற்றம் செய்ய இடமளிக்காதிருப்போம் (1யோவான் 3:15-17).

## 8. பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்..

அப்போஸ்தலர் 1:5 “ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல், என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.”

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு காண்பித்த தரிசனம் ஒன்றில், பேதுருவிற்கு அவர்கொடுத்த கட்டளை இது. பொதுவாக காத்திருத்தல் என்பது, இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்வியல் கொண்ட மனுக்குலத்திற்கு பழக்கமான ஒன்று தான். பயிர் செய்துவிட்டு விளைச்சலுக்காக காத்திருந்தான். விதைவிதைத்து கனிக்காக காத்திருந்தான். ஆனால், இந்த இயந்திர அவசர உலகத்தில், எல்லாம் வேகமாக மாத்திரமல்ல, ‘உடனே’ நடக்க வேண்டும் என்ற ஆபத்தான மனோநிலை ஓங்கி நிற்கின்றது. ஆயினும் கர்த்தர் சொன்னது சொன்னபடியே நடக்கும் (சங். 33:9; 1 இராஜா. 8:15). ஏனெனில், அவர் வாக்குமாறாதவர். ஆகையால் அதனை முழு இருதயத்தோடும் விசுவாசித்து, கர்த்தர், நம் வாழ்வில் செயல்படும் வரை காத்திருந்தால், ஆபிரகாமைப் போல

பிதாவின் சித்தம் நிறைவேற்றி அவைகளை பெற்றும் கொள்வோம்!

நாம் நம்புகின்ற கர்த்தர், எவ்வளவேனும் பொய்யுரையாதவர் (எபிரெயர் 6:18), வாக்குமாறாதவர் (எபிரெயர் 10:23), உண்மையுள்ளவர் (எபிரெயர் 11:11,12), சர்வ வல்லவர் (எபிரெயர் 11:18), என்றும் மாறாவர் (எபிரெயர் 13:8; மல்கியா 3:6), அவருடைய வாக்குறுதிகள் தாமதிப்பதில்லை (ஆபகூக் 2:3), ஏனெனில், அவர் அந்தந்த காரியங்களை, சரியான நேரங்களில். மிகவும் நேர்த்தியாக செய்பவர் (பிரசங்கி 3:1-11), அவர் தாமதிக்கின்றார் என்று நாம் எண்ணிக்கொள்கின்றோம் (2பேதுரு 3:9), ஆனால் அவர் எதனையும் தாமதமின்றி செய்கின்றவர். அதாவது, தாமதம்பண்ணாதவர் (எபிரெயர் 10:37). ஆகையால், நாம் திட மனதுடன் அவருக்கு காத்திருப்போம் (சங்கீதம் 27:14).

## 9. நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்..

அப்போஸ்தலர் 9:3-5 "அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்."

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு காண்பித்த தரிசனங்கள் ஒன்றில், சவுலாகிய பவுலைப் பார்த்து, வேதனையுடன் சொன்ன வார்த்தை இது. பவுல், சபையை, அதாவது சபையில் உள்ளவர்களை (கிறிஸ்தவர்களை) துன்பபடுத்தினான். ஆண்டவர் இயேசு, ஏன் என்னை துன்பபடுத்துகிறாய்? என்று கேட்டார். சபையை துன்பப்படுத்துவது (சபையில் உள்ளவர்களை) அவரையே துன்பபடுத்துவதாகும். கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் நாம் தனித்தனியே பிரித்துப் பார்க்கக்கூடாது! என்பதனை இங்கே அழுத்தமாக பதிவு செய்துள்ளார். சபைக் கூடுகையை தடைசெய்வது, கூடி வருகின்றவர்களை தாக்குவது, சபைகூடுகைகளில் பிரச்சனை செய்து குழப்பம் உண்டாக்குவது, அல்லது, ஏதேனும் ஒரு வகையில் சபைக்கு தொல்லை தருவது, ஆகிய எல்லாம், கிறிஸ்துவை துன்பபடுத்துவதாகும் என்பதனை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

சபைக்கு வருகின்றவர்களுக்கு, அதாவது சகோதர சகோதரிகளுக்கு இடறல் உண்டாக்கி, அவர்களது வருகையை தடுப்பதும், தவிர்ப்பதும் கிறிஸ்துவை துன்பபடுத்துவதாகும். ஆகையால் தான், ஆண்டவர் இயேசு, இடறல் உண்டாக்கு கின்ற அப்படிபட்டவர்களை எந்திரக்கல் கட்டி, கடலின் ஆழத்தில் அமிழ்த்துவது அவர்களுக்கு நலமாயிருக்கும் என்றார் (மாற்கு 9:42). இல்லையென்றால், அவர்களுக்கான நரக தண்டனை கொடூரமானதாக இருக்கும் (மாற்கு 9:43-48). ஆகையால், நான் சபையை துன்பப்படுத்துகின்றேனா? சபைக்கு இடறல் உண்டாக்குகின்றேனா? என்று, நாம் அனுதினமும், அடிக்கடி நம்மை நாமே பரிசோதனை செய்து பார்த்துக்கொள்வோம்.


### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

## 10. ஒருவனைத் தேடு..

அப்போஸ்தலர் 9:10 "தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான். அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு. அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான். அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார்."

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, காண்பித்த தரிசனங்கள் ஒன்றில் அனனியாவிற்கு கொடுத்த வேலை இது. கர்த்தர் மீதும், அவருடைய சத்தியத்தின் மீதும் தாகம் கொண்டவர்களை தேடிக்கண்டுபிடிக்க வேண்டிய வேலை, கிறிஸ்துவின் இரத்தத்தினால், மீட்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உண்டு. இது பரிசுத்தமான வேலை, பரமனுடைய வேலை. ஆகையால், பரிசுத்தமாக்கப்பட்ட ஒவ்வொருவரும் தவறாமல் செய்தே ஆக வேண்டிய வேலை, அல்லது, நிறைவேற்ற வேண்டிய பொறுப்பாகும் (1கொரிந்தியர் 9:15; மத்தேயு 28:18-20; மாற்கு 16:15).

'இந்த பட்டணத்தில் எனக்கு அநேக மக்கள் உண்டு. ஆகையால், நீ தைரியமாக நற்செய்தியை சொல்லு' என ஆண்டவர் இயேசு பவுலை உற்சாகப்படுத்தினார் (அப்போஸ்தலர்). எலியா, நான் மாத்திரம் தான் உங்களுக்கு வைராக்கியமாக இருக்கின்றேன் என சொன்னபோது, கர்த்தர் நீ மாத்திரமல்ல, இஸ்ரயேலிலே இன்னும் ஏழாயிரம் பேர் எனக்காக இருக்கின்றார்கள் என்றார் (1இராஜாக்கள் 19:18). அதேப்போல், நாம் இருக்கின்ற பகுதிகளில் கர்த்தருக்கான மக்கள் நிச்சயமாக இருக்கின்றனர். அவர்களை கண்டுபிடிக்கும்வரை, நாம் கலக்கமின்றி, தயக்கமின்றி, பணியாற்ற வேண்டும். அதுவே நமது கடமையாகும். அதற்காக நாம் அழைக்கப் பட்டுள்ளோம், மற்றும் தெரிந்துக் கொள்ளப் பட்டுள்ளோம் (1பேதுரு 2:9). ஆகையால் பாரத்துடனும், தாகத்துடனும், அர்ப்பணிபுடனும் அதனைச் செய்வோம்!

இறுதியாக, அன்பானவர்களே! ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தப் பின்பு, பேசின வார்த்தைகளிலிருந்து, நமக்கான வாழ்வியல் பாடங்களை நாம் கற்றறிந்தோம். அதன்படி நமது வாழ்வை சீரமைப்போம். மறுபடியும் புதுப்பிப்போம். அவர்களுக்கு அருள் வழங்கி, பரலோகம் சென்ற (லூக்கா 24:50). நம் ஆண்டவர் இயேசு நம்மையும் ஆசீர்வதிப்பாராக.

**– அன்புடன், ஆசிரியர்**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am. **Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# தேர்ந்தெடுத்தல் - சரியான முடிவு!

கர்த்தருக்குள் பிரியமான சகோதரிகள் யாவருக்கும் உயிர்த்தெழுந்த இயேசு ஆண்டவரின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

நீங்கள் அனைவரும் கோடைக்காலத்தில் சுகமாக இருக்க நான் ஜெபிக்கின்றேன்!

பிரியமானவர்களே! இன்றைய காலத்தில் நாம் பல சவால்களை சந்திக்கின்றோம். இந்த சூழ்நிலைகளுக்கு நடுவே, நம் பிதாவாகிய கடவுள் நம்மை எப்படி நடத்துகிறார் என்பதை புரிந்து கொள்ள இந்த மாதம் நாம் படிக்கவிருக்கும் நபர், நமக்கு நல்ல உதாரணம்.

இவர் ஒரு ராஜகுமாரி அல்ல, செல்வமிக்க ஒரு பெண் அல்ல; இவர் ஒரு சாதாரண பெண் (விதவை). இவர் தன் வாழ்வில் எடுத்த மிகத் தெளிவான, சரியான முடிவு அவரது வாழ்வை முழுமையாக மாற்றியது. இஸ்ரவேலின் தேவன் இவருக்கு துணையாக இருந்தார்.

**1) உறுதியான முடிவு:** (ரூத் 1:1-18)

நாம் வேதாகமத்தைப் படிக்கும்போது, அதில் நகோமி தனது கணவரையும், தன் இரு குமாரர்களையும் இழந்தாள். அதில் ஒரு மகனின் மனைவி தான் நாம் படிக்க இருக்கும் ரூத். இந்த ரூத் தன் கணவனை இழந்து தனித்திருக்கும் நேரத்தில், தன் சொந்த நாட்டிற்கு திரும்பி இருக்கலாம். ஆனால், அவள் தன் கணவனின் குடும்பம் தெரிந்து கொண்ட உண்மையான கடவுளை, தன் சொந்த கடவுளாக தன் வாழ்வில் ஏற்றுக் கொண்டாள். "உம்முடைய தேவன் என் தேவன்" என்றாள்.

ஆம்! பிரியமானவர்களே, ரூத் தன் இக்கட்டான சூழ்நிலையிலும் கடவுளை விட்டு பிரியவில்லை; விசுவாசத்தில் நிலைத்திருந்தாள் (ரூத் 1:16,17; சங்கீதம் 37:5; யோசுவா 24:15).

**2) பணிவு, உழைப்பு:** (ரூத் 2)

ரூத் வேலைத் தேடி வயலுக்குச் சென்றாள். அவள் தான் செய்யும் வேலை சிறியது, பெரியது என்று பிரித்துப் பார்க்கவில்லை. **தேவன், உழைக்கும் மக்களை ஆசீர்வதிப்பார்!** தன்னை யாரும் கவனிக்காத இடத்தில் உண்மையாக உழைத்தாள். தேவன் அவளை உயர்த்தினார் (ரூத் 2:2,3; நீதி. 14:23; கொலோ.3:23).

**3) நல்ல குணம்:** (ரூத் 2:11,12)

போவாஸ் ரூத்தைப் பார்த்தபோது, அவளைப் பற்றி நல்ல காரியங்களை அவன் ஏற்கனவே கேட்டிருந்தான். அவள் பேசாமல், அவளது நடக்கை அவளைப்பற்றி பேசியது. நம் குணம் நம்மை உயர்த்தும். பிறர் முன்பு நம் நடத்தை கவனமாக இருக்க வேண்டும் (1 பேதுரு 3:3,4).

இந்த உலகம் இவ்வாறு சொல்லிக் கொடுக்கலாம், 'யார் என்ன நினைத்தால் என்ன? உன் மனதிற்கு பிடித்ததை பேசு, செய்' ஆனால், கடவுளின் கட்டளை ஒரு பெண் இவ்வாறு இருக்க வேண்டும் என்பதே

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ" காழ்வை

அகில் அல்லது காழ்வை (Aquilaria malaccensis) என்பது முதன்மையாக அதன் கட்டைகளுக்காகப் பெரு மதிப்பு மிக்கதாகக் கருதப்படும் தாவர இனம் ஒன்றாகும். இது வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், லாவோசு, மலேசியா, மியான்மர், பிலிப்பீன்சு, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுகிறது. இது வளரும் இடங்களின் இழப்புக் காரணமாக, இது அழிவாய்ப்பு இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. திருக்காறாயில் திருத்தலத்தில் தலமரமாக விளங்குவது அகில் மரமாகும்.



அகில் நறுமணப் பொருள்களின் தயாரிப்புக்காகப் பெறப்படும் அகிற்கட்டைகளின் (Agarwood) முதன்மையான வளப்பொருள் ஆகும். இதன் தண்டுப் பகுதியின் சுரப்பான அகிற் பிசின் நறுமணமானது ஆகும். உண்மையில் அகிற் பிசின் சுரக்கப்படுவது, கரிய பூஞ்சண வகையொன்று இம்மரங்களைத் தொற்றுகையில் அதனை எதிர்ப்பதற்கான விளை பொருளாகவேயாகும்.

உலகின் விலைமதிப்புள்ள மரங்களில் ஒன்றாக ஆப்பிரிக்க கருமரம் (African blackwood) கருங்காலி, செந்தந்த மரம் (Pink ivory) சந்தன மரம் ஆகியவற்றின் வரிசையில் அகில் திகழ்கிறது.

(தெளிந்த புத்தி, நல்நடத்தை) (நீதிமொழிகள் 22:1; மத்தேயு 5:16; நீதிமொழிகள் 31)

### 4) நேரமும், திட்டமும் கர்த்தருக்குள்: (ரூத் 1:3,4)

ரூத்தின் வாழ்வில் போவாஸ் வந்தது ஒரு சாதாரண சம்பவம் அல்ல, அது தேவனுடைய திட்டம். 1) ரூத் ஆசீர்வதிக்கப்பட்டாள், 2) மரியாதை பெற்றாள், 3) ராஜா தாவீது வம்சத்தில் சேர்ந்தாள்.

தேவன் நமக்கு சிறந்த திட்டம் வைத்திருக்கிறார். சரியான நேரத்தில் தேவன் கதவை திறப்பார் (ரூத் 4:13-17; எரேமியா 29:11; பிரசங்கி 3:11).

### 5) ரூத் வாழ்வில் இருந்து பாடங்கள்:

1) விசுவாசம், 2) அர்ப்பணிப்பு, 3) பணிவு, 4) பொறுமை, 5) கீழ்ப்படிதல், 6) பரிசுத்தம் (ரூத் 3:10,11)

இன்று நாமும் ரூத் போல 1) விசுவாசமாக இருந்தால், 2) உறுதியாக இருந்தால், 3) தேவனை தேர்வு செய்தால் நம்முடைய வாழ்வும் மாற்றப்படும் (பிலிப்பியர் 1:6).

ஆம், பிரியமானவர்களே! ரூத் தன் வாழ்வில் எல்லாவற்றையும் இழந்த தருணத்திலும், கடவுளுக்குள் அவள் எடுத்த முடிவு (சரியான தேர்வு), இஸ்ரேலின் கடவுளை தன் கடவுளாக ஏற்றுக் கொண்டது, அவரது முழு வாழ்க்கை பாதையையும் ஆசீர்வாதமாக மாற்றியது (ரூத் 4:14,15). நாமும் நமது வாழ்வில் கஷ்டங்களிலும், போராட்டங் களிலும் நம் கடவுளை விட்டு விடக்கூடாது. பரிசுத்தமாக வாழ வேண்டும், குடும்பத்தில் உண்மையாகவும், அன்பாகவும் இருக்க வேண்டும். பணிவு, உழைப்பு, நல்ல குணம் இருக்க வேண்டும். தேவனுடைய நேரத்துக்கு காத்திருக்க வேண்டும்.

கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## ஆப்ரிக்க கண்டத்தில் இறைபணி..









**நமது ஆசிரியர் மற்றும் இணை ஆசிரியரின் ஆப்ரிக்கா ஊழியப் பயணத்தின்போது, நடைபெற்ற JC ஆத்தும ஆதாயப்பயிற்சி வகுப்புகள்...**

# காணாமல் போன நாணயம்

**லூக்கா 15:8-10**

அன்பான வாலிப தம்பி தங்கைகளுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ச்சியாக இயேசு கிறிஸ்துவின் உவமைகளையும், அதன் ஆவிக்குரிய அர்த்தங்களையும் படித்து வருகின்றோம்.

வேதாகம அடிப்படையில் 'உவமை' என்பது "பூமிக்குரிய உதாரணங்களை கொண்டு பரலோக அர்த்தங்களை, காரியங்களை விளக்குவதே ஆகும்."

இந்த மாதம் லூக்கா 15ம் அதிகாரத்திலிருந்து, ஒரு வெள்ளிக்காசை தொலைத்த பெண்ணிடம் இருந்து, இயேசு விளக்கும் காரியத்தை படிப்போம். ஒரு பெண் 10 வெள்ளிக்காசை தனக்கு சொந்தமாக வைத்திருந்தாள். அதில் ஒன்று தொலைத்துபோக, மீதமுள்ள 9 காசுகளை வைத்துவிட்டு, தொலைந்து போன ஒன்று கிடைக்கும் வரை விளக்கை ஏற்றி, வீட்டை பெருக்கி தேடிக்கொண்டே இருந்தாள்.

வெகுநேரம் சென்று தொலைந்துபோன ஒரு வெள்ளிக்காசை அந்த பெண் கண்டுபிடிக்க, அதிக மகிழ்ச்சியடைந்து பின்னர் தன் சிநேகிதிகளையும், அண்டை வீட்டாரையும் அழைத்து என்னோடு நீங்களும் சந்தோஷப்படுங்கள் என்றாள். ஒரு வெள்ளிக்காசு தானே என ஏளனமாக எண்ணாமல், காணாமல் போய்விட்டது விட்டுவிடலாம் என பின்வாங்காமல், கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்ற முயற்சி அவளிடம் இருந்தது.

இந்த உவமையில் ஆண்டவர் இயேசு விவரிக்க வரும் பொருள், பரலோக கடவுள் மனித குலம் மீது வைத்திருக்கும் அன்பு. யாரொருவரும் பாவத்தில் கெட்டுப்போய் விடக்கூடாது என்ற ஏக்கம் தெரிகிறது. ஒரு காசை அதிக ஆர்வத்துடன் தேடிய பெண்ணைப்போல, கர்த்தருக்கும் தம் ஜனத்தை இவ்வளாய் அன்போடு தேடுகிறார் (லூக்கா 19:10).

மத். 11:19-ல் ஆண்டவர் இயேசு, 'பாவிகளின் நண்பர்' என்றே சொல்லப்படுகிறது. அப்படியென்றால் பாவிகளாகிய உலக மக்களின் மீது, கர்த்தரின் அன்பு எப்படியாக வெளிப்படுகின்றது.

(தொடர்ச்சி... 10ம் பக்கம்)

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | A. ஹானா ஜோதிராணி | மதுரை |
| 2. | D. டே∴ப்னி | சென்னை |
| 3. | D. ஜுனித்தா | சென்னை |
| 4. | S. ஜுடித் ஆராதனா | ராணிபேட்டை |
| 5. | A. ஆடின் ∴பேபியோ | ராணிபேட்டை |
| 6. | A. ஆலன் காலேப் | ராணிபேட்டை |
| 7. | S. ஜோசுவா | ராணிபேட்டை |
| 8. | A. சுபிக்ஷா | பெருமாள் வலசு |
| 9. | M. ஜோனத்தான் | கரூர் |
| 10. | A. சாம் குமார் | பெருமாள் வலசு |
| 11. | V. ஏஞ்சல் ஜோயன்னா | மதுரை |
| 12. | M. அபி பிலேமோன் | எழுகம்வலசு |
| 13. | J. நவீன் பீட்டர் | மதுரை |
| 14. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | மதுரை |
| 15. | S. ஜூடா லியோ | ரஸ்தா |
| 16. | G. ஜெர்லின் | ரஸ்தா |

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யோவாகாஸ் ராஜா கடவுளிடம் எந்த முறையில், என்ன வேண்டினார்?
2. சாலமோன் ராஜா கர்த்தரிடம் என்ன கேட்டார்? அதற்கு கர்த்தர் அவருக்கு எதையும் தருவேன் என்றார்?
3. நினிவே பட்டண மக்களிடம் கர்த்தரின் எச்சரிப்பு என்ன? அதற்கு அந்த மக்களின் பதில் செயல் என்ன?
4. பார்வோன் ராஜாவிடம் உங்கள் கனவுகளுக்கு விளக்கங்களை யார் கொடுப்பதாக யோசேப்பு கூறினார்?
5. எவைகள் ஞானத்தின் ஆரம்பம் என்று சாலமோன் ராஜா கூறுகிறார்?



பரலோக கர்த்தர், உலகில் தப்பிப்போன, அதாவது பாவத்தில் தொலைந்துபோன எவர் ஒருவரையும், ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியின் மூலமாக தம்மிடமாக சேர்க்க முயற்சி செய்கிறார். கடைசி வரை அதாவது பாவிகளை மீட்டு தம்முடைய வீடாகிய சபைக்குள் சேர்த்து மகிழும்வரை அவரது முயற்சி தொடரும். இன்றே கடவுளின் அழைப்பைக் கேட்போம்! அவரது செய்திக்குக் கீழ்ப்படிவோம்! தொலைந்துபோன, பாவத்தினால் காணாமல் போயிருக்கிற நம்முடைய வாழ்வை கடவுள் கண்டுகொண்டு சரிசெய்ய ஒப்புக்கொடுப்போம்!

– உங்கள் அண்ணன் **ஜோசப் பிரதீப்**

பொதுவான செய்திகள்

# இந்தியத் தேர்தல் ஆணையம்

இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) என்பது இந்தியாவில் நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை நடுநிலையோடு, சுதந்திரமாக நடத்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் (பிரிவு 324) நிறுவப்பட்ட தன்னாட்சி அமைப்பாகும். இது டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு ஆணையர்களைக் கொண்ட 3 உறுப்பினர்கள் அமைப்பாகச் செயல்படுகிறது.

**முக்கியத் தகவல்கள்:**

| | | |
|---|---|---|
| நிறுவப்பட்ட நாள் | : | 25 ஜனவரி 1950. |
| தலைமையகம் | : | புது தில்லி (நிர்வாசன் சதன்). |
| பதவிக்காலம் | : | 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை. |
| நியமனம் | : | இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். |

**முக்கியப் பணிகள்:**

| | | |
|---|---|---|
| வாக்காளர் பட்டியல் | : | வாக்காளர் பட்டியலைத் தயாரித்தல் மற்றும் புதுப்பித்தல். |
| தேர்தல் நடத்துதல் | : | லோக்சபா மற்றும் மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களை நடத்துதல். |
| சின்னங்கள் ஒதுக்கீடு | : | அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் மற்றும் சின்னங்களை ஒதுக்குதல். |
| நடத்தை விதிகள் | : | தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல். |

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் eci.gov.in ஆகும்.

# யோவாகாசின் பொல்லாத ஆட்சி

2 இராஜாக்கள் 13,14

செல்லக் குட்டிகளா? எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள், நல்லா இருக்கீங்களா? இந்த மாதம் நாம் யோவாகாசின் பொல்லாத ஆட்சியும், அதன் விளைவையும் பற்றி கற்றுக்கொள்ளலாமா?

**1. ராஜாவுக்கு ஒரு கெட்ட பழக்கம்:**

முன்னொரு காலத்தில் யோவாகாஸ் என்னும் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு பெரிய நாட்டுக்கு தலைவர். ஆனால் அவருக்கு ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. கடவுள் இதைச் செய்யாதே என்று சொன்ன சிலைகளை அவர் வணங்கிக் கொண்டு இருந்தார். அது மட்டுமில்லாம, மத்தவங்களையும் தப்புச் செய்ய சொன்னார்.

**2. ராஜாவுக்கு வந்த பயம்:**

அவர் கடவுள் பேச்சைக் கேட்காததுனால, அந்த நாட்டுக்கு ஒரு பெரிய ஆபத்து வந்தது. எதிரி நாட்டு ராஜா ஒரு பெரிய படையோடே சண்டைக்கு வந்தார். யோவாகாஸ் ராஜாகிட்ட இருந்த பெரிய பெரிய யானை, குதிரைப்படையெல்லாம் காணாம போயிருச்சு. அவர்கிட்ட மிஞ்சியது வெறும் கொஞ்சம் வீரர்கள்தான். ஐயோ! இப்போ என்ன பண்றது? நம்ம நாடு அழியப் போகுதே!ன்னு ராஜா ரொம்ப பயந்தார்.



**3. முழங்கால் படியிட்டு ஜெபம்!**

அப்போதுதான் ராஜாவுக்கு ஒரு புத்தி வந்தது. நம்ம தப்பு பண்ணிட்டோம், கடவுள் கிட்ட உதவி கேட்போம்-னு நினைச்சாரு. அவர் தன் கிரீடத்தை கழட்டி வச்சுட்டு, முழங்கால்படியிட்டு, கடவுளே! என்னை மன்னிச்சிருங்க, எங்களைக் காப்பாத்துங்க! அப்படின்னு மனதார வேண்டிக்கிட்டார்.

**4. கடவுள் கொடுத்த சர்ப்ரைஸ்:**

குட்டிப் பிள்ளைகளா! நாம தெரியாம தப்புப் பண்ணிட்டு, மனசார மன்னிப்பு கேட்டு, அதிலிருந்து திரும்பினால் கடவுளுக்கு ரொம்ப பிடிக்கும். ராஜா பாவம் செஞ்சிருந்தாலும், அவர் உண்மையாகவே தப்பை ஒத்துகிட்டு அதை அவரிடம் சொல்லி, மனந்திரும்பியதால கடவுள் அவர்மேல் இரக்கப்பட்டார். உடனே கடவுள் அவங்களுக்கு உதவி செஞ்சு, அந்தப் பெரிய ஆபத்துல இருந்து யோவாகாஸ் ராஜாவையும், அவர் நாட்டு மக்களையும் காப்பாற்றினார்.

இதிலிருந்த என்ன பாடம் நமக்கு:

**1. தப்ப ஒத்துக்கோங்க:** நாம ஏதாவது தப்பு பண்ணிட்டா, அதை மறைக்காம அம்மா, அப்பாகிட்டயும், கடவுள் கிட்டயும் ஒத்துக்கிட்டு சாரி சொல்லிடணும்.

**2. கடவுள் பெரியவர்:** நம்மால முடியாத கரியத்தைக் கூட கடவுள் செஞ்சு முடிப்பார்.

**3. ஜெபம் ஒரு சூப்பர் பவர்:** நாம பயப்படும்போது கடவுள் கிட்ட பேசினா (ஜெபம் செய்தால்), அவர் கண்டிப்பா நமக்கு உதவி செய்வார். நீங்கள் எப்ப ஜெபம் பண்ணினாலும் கடவுள் கேட்பார். செய்வீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்!

**மனப்பாட வசனம்: 2 இராஜாக்கள் 13:4**

"யோவாகாஸ் கர்த்தருடைய சமுகத்தை நோக்கிப் பிரார்த்தித்தான் ..கர்த்தர் அவனுக்குச் செவிகொடுத்தார்."

– சகோ. அன்பு ஏசுதாஸ்

# கர்த்தரிடம் ஞானத்தை அருளும்படி வேண்டிக்கொண்ட சாலமோன்

கர்த்தருக்குள் அன்பான செல்லப் பிள்ளைகளா!!! அனைவரும் நலமாக இருக்கின்றீர்களா? கர்த்தருடைய நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து, உங்களை ஆசீர்வதிப்பாராக!

உலகத்திலேயே விலை உயர்ந்தது எது என்று உங்களுக்கு தெரியுமா?. அதுதான் ஞானம். ஞானம் என்றால் என்ன? கர்த்தருக்கு பயந்து நடத்தலே ஞானம். எந்த செயல் செய்யும்பொழுதும் சரியான திட்டமிடலும், அந்த செயலினால் உண்டாகும் விளைவுகளை முன்னமே அறிதலும், அனைத்து மக்களுக்கும் நன்மை உண்டாக்கும்படியான வாழ்க்கையும், உலகைக் குறித்ததான சரியான பார்வையும் கொண்டு இருத்தலே ஞானம் ஆகும். நீதிமொழிகளில் 'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.' என்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது.

தாவீது ராஜாவின் மகனுடைய பெயர்தான் சாலமோன்.

தாவீதுவிற்கு பிறகு ராஜாவாக சாலமோன் நியமிக்கப்பட்டார். பூமியில் இருந்து அரசுகளிலே மிகப்பெரிய அரசாங்கத்தை ஆளுகை செய்யும்படியாக சாலமோன் நியமிக்கப்பட்டிருந்தார். கர்த்தர் அவனோடு இருந்து அவனை மிகவும் பெரியவனாக்கினார் என்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது. கர்த்தாரால் நேசிக்கப்பட்ட அரசனாக சாலமோன் இருந்தார். சாலமோனிடம் ஏராளமான சொத்துக்கள் இருந்தது. கர்த்தருடைய அருளும் இருந்தது.

இப்படியிருக்க ஒருநாள், சாலமோன், கர்த்தருக்கு சர்வாங்க தகன பலியிடும்படியாக கிபியோன் என்ற இடத்திலிருக்கிற தகன பலியிடும் மேடைக்கு வந்தான். அங்கே ஆயிரம் சர்வாங்க தகன பலிகளை செலுத்தினான். அன்று இரவிலே கர்த்தர் சாலமோனுக்கு தரிசனம் ஆனார். நீ விரும்புகிறதை கேள் என்று சாலமோனிடம் சொன்னார். அதற்கு சாலமோன் நான் என்னுடைய மக்களிடம் சரியாக நியாயம் விசாரிப்பதற்கு ஞானத்தை அருளும்படி, வேண்டிக்கொண்டான். அப்பொழுது கர்த்தர் சாலமோனை நோக்கி 'நீ ஐசுவரியத்தையும், நீடிய ஆயுளையும் கேட்காமல், நான் உன்னை அரசாளப்பண்ணின என்னுடைய மக்களை நியாயம் விசாரிக்கத்தக்க ஞானத்தையும் விவேகத்தையும் நீ கேட்டபடியினால், ஞானமும் விவேகமும் தருகிறதோடு, உனக்கு முன் இருந்த ராஜாக்களை பார்க்கிலும் அதிக ஐசுவரியத்தையும், மரியாதையையும் உனக்குத் தருவேன் என்றார்.'



பிரியாமான செல்லங்களா!!! சாலமோன் ராஜாவின் வேண்டுதல் எப்படிப்பட்டதாயிருக்கிறதென்று பார்த்தீர்களா?. செல்வத்தை காட்டிலும், நீடிய ஆயுளை காட்டிலும் விலை உயர்வான ஞானத்தை கேட்கிறார். அதினால் கர்த்தர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். வேதாகமத்தில் வாழ்ந்த முன்னோர்களிலேயே சாலமோன் மிகவும் ஞானம் பெற்றவராக இருந்தார். 'நீதிமொழிகள்' என்னும் ஒவ்வொரு மனிதனும் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும் என்று சொல்கின்ற அறநெறிகளையும் அதில் எழுதினார். மேலும் சாலமோனுடைய ஆட்சி காலத்தில், வெள்ளியும் பொன்னும் அளவுக்கு அதிகாமக பெருகியது என்று வசனம் சொல்லுகிறது.

ஞானம் செல்வத்தைப் பெருக்கும், நாட்டை செழிக்கச் செய்யும். நாமும் ஞானத்தோடு வாழ்ந்தால், நாமும் நம்முடைய வீடும். நாம் வாழ்கின்ற நாடும் செழித்திருக்கும். நாம் எப்படி ஞானத்தைப் பெற்றுக் கொள்வது? இதற்கான பதில் மிகவும் எளிமையானது. உங்கள் வீட்டில் இருக்கும் பைபிளை வாசியுங்கள். அதின்படி நடவுங்கள். மேலே சொன்னதுபோல 'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்' என்று சாலமோனின் நீதிமொழிகளில் கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது.

அப்பாவுடன் காலையிலும் இரவிலும் கர்த்தருடைய வசனத்தை வாசியுங்கள். அம்மாவுடன் குடும்பமாக ஜெபம் செய்யுங்கள், சாலமோனைப்போல கர்த்தரிடம் ஞானத்தை அருளும்படி வேண்டுதல் செய்யுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 1:7**

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்."

**– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்**

## நினிவே மக்களின் மனந்திரும்புதலும், கர்த்தருடைய கிருபையும்

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த அண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். குட்டீஸ் இந்த மாதம் நாம் யோனாவைப் பற்றியும், அவர் மூலமாக கர்த்தருடைய எச்சரிப்பைப் பற்றியும் படிக்கவிருக்கிறோம். கர்த்தர் யோனாவை நோக்கி; நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார்.

கர்த்தர் சொன்னபடியே, யோனா நினிவேக்குப் போய்: இன்னும் நாற்பதுநாள் உண்டு. அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொன்னார். அதை கேட்ட நினிவேயிலுள்ள மக்கள் தேவனை விசுவாசித்து, உபவாசித்து, பெரியோர்முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள்.



இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவரும் தன் சிங்காசனத்தை விட்டு, எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தார்.

மேலும் ராஜா, நினிவேயிலெங்கும் மனுஷரும், மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும் உண்ணாமலும், மேயாமலும், தண்ணீர் குடியாமலும் இருக்கவும், இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும், தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத் தெரியும்; நாம் அழிந்து போகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிர கோபத்தைவிட்டு திரும்பினாலும் திரும்புவார் என்று தங்களது மனந்திரும்புதலை வெளிக்காட்டினார்கள்.

இவ்வாறு அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினதை கண்ட தேவன், அந்த ஜனங்களுக்குத்தான் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். அவர்கள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். குட்டீஸ்! பார்த்தீர்களா? தேவனுடைய வார்த்தையின் எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டபோது, அதை அசட்டை செய்யாமல் உடனே மனந்திரும்பி, தங்களது பொல்லாத வழியை விட்டுவிட்டபடியால் அவர்கள் அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டார்கள். நீங்களும் பைபிள் படிக்கும்போது, உங்களிடம் கீழ்ப்படிதலும், அடுத்து தேவனுக்குப் பிரியமில்லாத செயல் உங்களிடம் இருந்தால் உடனே அதனை சரிசெய்து கொள்ளும்போது, இந்த நினிவே பட்டணத்து மக்கள் காப்பாற்றப்பட்டதுபோல, அவர் உங்களிடம் அன்புகூர்ந்து, ஆசீர்வதித்து, ஏற்றுக் கொள்வார். குட்டீஸ் நீங்களும் அப்படியே செய்வீர்களா! அடுத்த இதழில் சந்திப்போம்!

**மனப்பாட வசனம்: யோபு 22:23**

“நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால், திரும்பக் கட்டப்படுவீர்; ..”

*– சகோதரி குயினி பிரதீப்*

# பார்வோன் கண்ட கனவு

கடவுளின் செல்லக் குழந்தைகளே! மீண்டும் இந்த மாதம் உங்களோடு கர்த்தருடைய திரு வார்த்தையைக் கொண்டு வருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாதம் பார்வோன் ராஜா இரண்டு கனவுகளை காண்கிறார். அதிலிருந்து நமக்கான பாடம் என்ன? என்பதைக் கற்றுக் கொள்வோம்.

ஆதியாகமம் 41 ஆம் அதிகாரத்தில், எகிப்து என்னும் நாட்டிலே பார்வோன் என்னும் ராஜா ஆளுகை செய்து கொண்டு வந்தார். ஒரு நாள் ராஜா தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது, இரண்டு கனவுகளை காண்கிறார். அதில் முதலாவது, அழகும் புஷ்டிமான ஏழு பசுக்கள் ஏறி வந்து தரையிலே புல் மேய்ந்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் மீண்டும் அதே நதிக்கரையில் இருந்து அவலட்சணமும், கேவலமான வேறு ஏழு பசுக்கள் நதியில் இருந்து ஏறி வந்து, அந்த அவலட்சனமும், கேவலமான பசுக்கள், அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களையும் கொடூரமான முறையிலே பட்சித்து தின்றுவிட்டது. இப்படியாக ராஜா முதல் கனவை கண்டு பயந்து கண் விழித்துக் கொண்டார்.



மறுபடியும் ராஜா நித்திரை செய்ய இரண்டாம் விசை ஒரு கனவை காண்கிறார். ஏழு கதிர்கள் ஒரே தாளில் இருந்து ஓங்கி வளர்ந்தது, அது அழகும், நிறைமேனியுமாக காணப்பட்டது. அதன்பின்பு கோணலும், கீழ்க் காற்றினால் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் முளைத்தது. கோணலும், கீழ்காற்றினால் தீய்ந்துப் போன அந்த ஏழு கதிர்களும், செழுமையும், அழகும், நிறைமேனியுமான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கி போட்டது. அப்பொழுது பார்வோன் விழித்துக் கொண்டு, அது கனவு என்று அறிந்து கொண்டான். ராஜா காலமே எழுந்து மனம் கலங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது ராஜா அரண்மனையில் உள்ள அனைவரையும் வரவழைத்து, தான் கண்ட கனவிற்கு விளக்கம் சொல்லும் படியாக கேட்டுக் கொண்டான். அப்பொழுது சிறைச்சாலையில் இருந்த யோசேப்பு அண்ணாவை அழைத்து தான் கண்ட கனவிற்கு

விளக்கம் தரும்படியாக கேட்டுக் கொண்டார். அப்பொழுது கனவுகளுக்கு விளக்கத்தை கொடுப்பது நான் அல்ல சர்வ வல்லமையுள்ள தேவனே அதற்கான விளக்கங்களை கொடுக்க முடியும் என்று யோசேப்பு அண்ணன் ராஜாவுக்கு மறு உத்தரவாகச் சொன்னார்.

அந்த சமயத்தில் அதனுடைய விளக்கத்தை பேசுகிறார். அவை என்னவென்றால் ஏழு பசுக்களும் ஏழு கதிர்களும் என்பது ஏழு வருடத்தை குறிக்க கூடியதாக இருக்கிறது. ஏழு பசுக்களும் ஏழு கதிர்களும் மற்ற பசுக்களையும் மற்ற கதிர்களையும் தின்று போட்டது என்பது, முதல் ஏழு வருஷம் தேசம் செழிப்பாக இருக்கும் என்றும், பிறகு ஏழு வருஷம் கொடுமையான பஞ்சத்தினாலே அவதிப்படும் என்றும், அங்கே ராஜா கண்ட கனவுகளுக்கான விளக்கத்தைச் சொன்னார்.

எனக்கு அன்பான குழந்தைகளே! இதிலிருந்து நம் கற்றுக் கொள்ளுகிற பாடம் என்னவென்றால், பரலோகத்தின் பரிசுத்த பிதா நமக்கான முன்னெச்சரிப்பை கொடுக்க கூடியவராக இருக்கிறார். நமக்கு கொடுக்கப்பட்ட நேரத்தையும், அந்த காலங்களையும் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகிறார். இந்த குழந்தை பருவத்தில் இருந்து, நீங்கள் எல்லோரும் கர்த்தரை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். சரியான முறையில் ஜெபிப்பதும், பாடல்கள் பாடுவதும், வேதம் வாசிப்பதும் இது போன்ற நல்ல காரியங்களை நாம் இந்த சிறுவயது தொடங்கி நாம் செய்யும் பொழுது, பின்பு வரக்கூடிய இந்த உலக வாழ்க்கையில் இருந்து நாம் சரியாக கர்த்தருக்கேற்ற வழியிலே தைரியமாக வாழ முடியும். கர்த்தருக்காக பிரயோஜனம் படுத்திக்கொள்ள வேண்டும். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து எல்லா நேரங்களிலும் காலங்களிலும் உங்களை பாதுகாத்து வழிநடத்துவாராக ஆமென்.

**மனப்பாட வசனம்: எபேசியர் 5:16**

"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

**– சகோ. பீட்டர்**

# ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க....



## ஜூன் - 2026

| | காலை | மாலை |
|---|---|---|
| | யோவான் | 2 நாளாகமம் |
| 1. | 12:27-50 | 15,16 |
| 2. | 13:1-20 | 17,18 |
| 3. | 13:21-38 | 19,20 |
| 4. | 14 | 21,22 |
| 5. | 15 | 23,24 |
| 6. | 16 | 25-27 |
| 7. | 17 | 28,29 |
| 8. | 18:1-18 | 30,31 |
| 9. | 18:19-40 | 32,33 |
| 10. | 19:1-22 | 34-36 |
| | | எஸ்றா |
| 11. | 19:23-42 | 1,2 |
| 12. | 20 | 3-5 |
| 13. | 21 | 6-8 |
| | அப்போஸ்தலர் | |
| 14. | 1 | 9,10 |
| | அப்போஸ்தலர் | நெகேமியா |
| 15. | 2:1-21 | 1-3 |
| 16. | 2:22-47 | 4-6 |
| 17. | 3 | 7-9 |
| 18. | 4:1-22 | 10,11 |
| 19. | 4:23-37 | 12,13 |
| | | எஸ்தர் |
| 20. | 5:1-21 | 1,2 |
| 21. | 5:22-42 | 3-5 |
| 22. | 6 | 6-8 |
| 23. | 7:1-21 | 9,10 |
| | | யோபு |
| 24. | 7:22-43 | 1,2 |
| 25. | 7:44-60 | 3,4 |
| 26. | 8:1-25 | 5-7 |
| 27. | 8:26-40 | 8-10 |
| 28. | 9:1-21 | 11-13 |
| 29. | 9:22-43 | 14-16 |
| 30. | 10:1-23 | 17-19 |

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

**வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431**

அடுத்த இதழில்..

# மே மாத கேள்விகள்

(லூக்கா சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)



1. 5 அப்பம் 2 மீனின் அற்புதம் எந்த பட்டணத்தின் வனாந்தரத்தில் நடந்தது?
2) இயேசுவின் பாதத்தருகே வசனங்களைக் கேட்டு கொண்டிருந்தவள் யார்?
3) பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு எதைக் கொடுப்பது அதிக நிச்சயம்?
4) அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டவர்கள் யார்?
5) இது நிலத்துக்காகிலும், எருவுக்காகிலும் உதவாது? அது என்ன?
6) யார் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும்?
7) இந்த பிரபஞ்சத்தின் பிள்ளைகள் எப்படியிருக்கிறார்கள்?
8) யாருக்கெல்லாம் ஊழியஞ்செய்ய ஒருவனால் கூடாது?
9) எவைகள் வராமல் போவது கூடாத காரியம்?
10) அப்போஸ்தலர் எதை வர்த்திக்கப்பண்ண இயேசுவிடம் கேட்டனர்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-06-2026**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. லூக்கா 2:42 | 6. லூக்கா 4:25 |
| 2. லூக்கா 3:1 | 7. லூக்கா 4:38,39 |
| 3. லூக்கா 3:5 | 8. லூக்கா 5:8 |
| 4. லூக்கா 3:23 | 9. லூக்கா 4:41 |
| 5. லூக்கா 4:1 | 10. லூக்கா 8:41 |

## சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1) | Mr. தாமஸ் ராபின்சிங் | பெரம்பலூர் |
| 2) | Mrs. பிளாரன்ஸ் முத்தையா | மதுரை |
| 3) | T. பால்வின் | சாந்தபுரம் |
| 4) | Y. ஜெயசுதா பொன்செல்வி | சென்னை |
| 5) | M.S. ஜேம்ஸ் | திண்டுக்கல் |
| 6) | Mrs.P. சமாதானம் பீட்டர் | விருதுநகர் |
| 7) | Mrs. ஹெலன் திலக் | தூத்துக்குடி |
| 8) | Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் | தூத்துக்குடி |
| 9) | Mrs. தெல்மா ஸ்டான்லி | மதுரை |
| 10) | A. லலிதா | புதுக்கோட்டை |
| 11) | Mrs. சாந்தி வில்லியம் | புதுக்கோட்டை |
| 12) | R. ஞானசிரோன்மணி | மதுரை |
| 13) | C. வைலட் கிறிஸ்டோபர் | தளவாய்புரம் |
| 14) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | சேலம் |
| 15) | J.V. சுந்தரபாய் வில்லியம் | சேலம் |
| 16) | Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | ஈரோடு |
| 17) | A. டேவிட் ஜெயசந்திரன் | மதுரை |
| 18) | Mrs. பெட்ரீஷியா டேவிட் | சேலம் |
| 19) | S.G. சேகர் | ராணிபேட்டை |
| 20) | J. ஜான்சி | ஆனைமலை |
| 21) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 22) | R. சரோஜா | தென்கலம் |
| 23) | A. அரவிந்த் | மதுரை |
| 24) | Dr. ஆட்லின் ஆனந்தன் | மதுரை |
| 25) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | கரூர் |
| 26) | P. ரேச்சல் ஜானிமா | நெல்லை |
| 27) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | படப்பை |
| 28) | A. ரோஸ்மேரி | சென்னை |
| 29) | Mrs. பெரில் பாஸ்கர் | படப்பை |
| 30) | N. ஞானசுந்தரி நாகராஜன் | பாளையங்கோட்டை |
| 31) | J. கிறிஸ்டோபர் தாஸ் | நாகர்கோயில் |
| 32) | Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் | நெல்லை |
| 33) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | மதுரை |
| 34) | N.V. அஜிதா சுபின் | மார்த்தாண்டம் |
| 35) | P.S. ருக்மணி | ஈரோடு |
| 36) | A. அனிதா ஸ்டாலின் | தரங்கை |
| 37) | S. கார்த்திக் | கரூர் |
| 38) | Mrs. J. பூங்கொடி ரவி | முத்தூர் |
| 39) | Mrs. இந்திரா பாண்டி | மதுரை |
| 40) | S. பேபி சந்தோஷ்குமார் | தங்கமேடு |
| 41) | M. அன்பழகன் | தங்கமேடு |
| 42) | G. ஏஞ்சலம்மாள் | மதுரை |
| 43) | Mrs. M. ஈஸ்வரி முருகன் | கரூர் |
| 44) | M. ராஜா | கரூர் |
| 45) | A. கார்பஸ் பிலேமோன் | மதுரை |
| 46) | S. ஜெபமணி | தென்காசி |
| 47) | T. பால்வின் | கன்னியாகுமரி |
| 48) | S. ஷீபா ஞானவின்சா | டோனாவூர் |
| 49) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 50) | Mrs. சுகுணா தமலின் | தூத்துக்குடி |
| 51) | S. டேவிட் சாந்தகுமார் | செங்கோட்டை |
| 52) | Mrs. சூரிய பிரியா | மதுரை |
| 53) | Mrs.D. குளோரி திலகவதி | சென்னை |
| 54) | S. பாக்கியராஜம் | மதுரை |
| 55) | Mr. டேவிட் ராஜ் | அனவரதநல்லூர் |
| 56) | N. ஜான் செல்லையா | மதுரை |
| 57) | Mrs. J. ஜெயராணி ஜான் | மதுரை |
| 58) | Mrs. ராணி குமரன் | கரூர் |
| 59) | Mr. தாமஸ் ராபின்சிங் | பெரம்பலூர் |
| 60) | Mrs. தேவி ராஜாசிங் | திருப்பூர் |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1** 📖 **94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2024 - 2026**
**Date of Publication : 9th May 2026**
**Posted at Arasaradi HPO on 10th & 11th May 2026**


# நமது ஆசிரியர் எழுதிய இரண்டு புதிய புத்தகங்கள் கிடைக்கும்!















# புதிய கைப்பிரதிகள் கிடைக்கும்!

புத்தகம் மற்றும்
கைப்பிரதிகள் தேவைக்கு
**92 4421 4421**
**& 92 4431 4431**


If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
**92 4421 4421, 92 4431 4431**

**To**

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers